**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**
**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**
**2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 10– ம் நாள் வெள்ளிக்கிழமை**
**(2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 27–ம் நாள்)**

**E.A.No.5/2026 in E.P.No.14/2023**

1. ஈஸ்வரன்
2. ஆனந்த் ........ மனுதாரர்கள் / 5 ,7 எதிர்மனுதாரர்கள் / 1–ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்

**/எதிர்/**

1. மஞ்சு
2. கணேஷ் ....... எதிர்மனுதாரர்கள் / மனுதாரர்கள் / தீர்ப்பு பெற்றவர்கள்
3. சின்னச்சாமி(இறப்பு)
4. காளப்பா(இறப்பு)
5. தேவம்மா
6. சரசம்மா
7. சாந்தி ......... எதிர்மனுதாரர்கள் / தீர்ப்புக் கடனாளிகள்

இந்த மனுவானது கடந்த 06.04.2026அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலகிருஷ்ணன் அவர்களும், 1, 2–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.C.அஜீத்குமார் அவர்களும், 3–ம் எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 2–ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்டதாலும், மனுதாரர்கள் மற்றும் 1, 2–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைத்த வாதுரையை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 21 விதி 106 மற்றும் பிரிவு 151ன் படி, 07.01.2026–ம் தேதியன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்.**

அசல் நிறைவேற்று மனுவானது சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. இ.ம.எண்.4/2025 மனுவில் தபால் மூலம் நோட்டீஸ் ஜாரி செய்வதற்காக தபால்காரர் வந்துள்ளார். மனுதாரர் திருப்பூரில் வசித்து வருகிறார், மனுதாரரின் சகோதரர் கோயம்புத்தூரில் தங்கி பணிபுரிந்து வருகிறார். இருவரும் மேற்படி முகவரியில் இல்லை. ஆனால், தபால்காரர் மனுதாரர்கள் நோட்டீஸை வாங்க மறுத்துவிட்டதாக எழுதி வைத்துள்ளார். எனவே, கடந்த 07.01.2026-ல் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி மனுதாரர்கள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1, 2-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரரின் மனு மோசடியானது. சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்களுக்கு நீதிமன்ற அழைப்பாணை சென்றபோதே வழக்கின் விவரம் தெரியும். மனுதாரர்கள் வேண்டுமென்றே அழைப்பாணையை வாங்காமல் விட்டுவிட்டு, தற்போது பொய்யான காரணங்களைக் கூறி மனுதாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்கள், 1, 2-ம் எதிர்மனுதாரர்களுக்கு சுவாதீனத்தை நீதிமன்ற உத்தரவுப்படி கொடுக்காமல் ஏமாற்றும் நோக்குடன் மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். வீண் காலதாமதம் செய்து வருகிறார்கள். எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்க வேண்டி மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே,
மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா, இல்லையா? என்பதேயாகும்.

**4. தீர்வு**

**4.1** இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரையை காணும்போது நிறைவேற்று மனுவில் அழைப்பாணையை பெற்றுக்கொண்டு, ஆஜராகாததால் மனுதாரர்கள் / 5, 7 எதிர்மனுதாரர்கள் கடந்த 07.01.2026-ம் தேதியன்று ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் நிறைவேற்று மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் இல்லை எனவும், ஆனால் அழைப்பாணையை மனுதாரர்கள் வாங்க மறுத்துவிட்டதாக நீதிமன்றத்திற்கு தெரிவித்து, ஒருதலைபட்ச உத்தரவிடப்பட்டுள்ளது எனவும், அதன் பின்னிட்டு மனுதாரர்கள் வழக்கறிஞர் மூலமாக மனுவின் நிலையை தெரிந்துகொண்டு, ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என மனுதாரர்கள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் வேறு முகவரியில் வசித்து வருவதை காட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. வேண்டுமென்றே அழைப்பாணையை வாங்காமல் விட்டுவிட்டு தற்போது பொய்யான காரணங்களுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**4.2** இம்மனுவானது கடந்த 07.01.2026-ல் இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பகிகப்பட்ட 30 நாட்களுக்குள் கடந்த 28.01.2026 -ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர்களுக்கு அவர்களது வழக்கை நிரூபிக்க வாய்ப்பு வழங்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும். மேலும், நீதியின் நலனை கருத்திற்கொண்டும் பின்வரும் நிபந்தனைகளுடன் இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும், மனுதாரரின் அலட்சியத்தால் எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர்களுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் காலதாமதத்தை ஈடு செய்யும் வகையில் மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

**1) மனுதாரர்கள் / 5, 7 எதிர்மனுதாரகள், எதிர்மனுதாரர்கள் / தீர்ப்பு கடனாளிக்கு இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.500/-ஐ வரும் 17.04.2026-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.**

**2) தவறும் பட்சத்தில் இம்மனுவானது மேற்கொண்டு எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படாமல் தள்ளுபடி செய்யப்படும்**

**மீண்டும் அழைக்க 17.04.2026**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.10 14:55:22 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சத்தியமங்கலம்.

இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.10 14:56:32 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சத்தியமங்கலம்.

FAIR ORDER
E.A.No.5/2026
E.P.No.14/2023
10 / 04 / 2026
DMC, SATHYAMANGALAM